23-03-12 தினத்தந்தி

### மெட்ரோ ரெயில் பணிக்காக

# அண்ணா சாலையில் போக்குவரத்து மாற்றம்

## நாளை முதல் அமலுக்கு வருகிறது

சென்னை, மார்ச்.23–

சென்னை மெட்ரோ ரெயில் பணிக்காக அண்ணா சாலையில் நாளை(24–ந் தேதி) முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்படும் என்று போலீசார் அறிவித்து உள்ளனர். இது தொடர்பாக போக்குவரத்து போலீசார் நேற்று இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

### மெட்ரோ ரெயில்

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தார் அண்ணாசாலையில் அண்ணா மேம்பாலம் முதல் விஜயராகவா சாலை சந்திப்புக்கு இடைப்பட்ட பகுதியில் மெட்ரோ ரெயில் நிலைய கட்டுமானபணிகள் துவக்க உள்ளதால், கீழ்கண்ட போக்குவரத்து மாற்றங்களை 24.03.2012(நாளை) காலை 7 மணி முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

★ அண்ணா மேம்பாலம் முதல் எல்டாம்ஸ் சாலை நோக்கி செல்லும் (அவுட் கோயிங்) போக்குவரத்தில் எந்த மாற்றமும் இல்லை.

★ எல்டாம்ஸ் சாலை சந்திப்பு முதல் அண்ணா மேம்பாலம் வரை ஒரு பாதை வழியாக மாநகர பேருந்துகள் செல்வதற்காக அனுமதிக்கப்படும். நந்தனத்தில் இருந்து வரும் மற்ற வாகனங்கள் தியாகராய சாலை, வடக்கு போக் சாலை, கோமதி நாயகம் சாலை வழியாக அண்ணா மேம்பாலம் செல்லலாம்.

### ஒரு வழிப்பாதை

★ வடக்கு போக் சாலை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டு தியாகராய சாலையில் இருந்து வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும். கோமதி நாயகம் சாலையில் இருந்து வடக்கு போக் சாலை நோக்கி செல்ல அனுமதி இல்லை.

★ கோமதிநாயகம் சாலை, வடக்கு போக் சாலை சந்திப்பு முதல் அண்ணா மேம்பாலம் வரை ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுகிறது. வாகனங்கள் வடக்கு போக் சாலை மற்றும் கோமதி நாயகம் சாலை சந்திப்பில் இருந்து அண்ணா மேம்பாலம் நோக்கி செல்லலாம். சுந்தர் தெரு சந்திப்பில் இருந்து கோமதி நாயகம் சாலையில் வடக்கு போக் சாலை சந்திப்பு நோக்கி செல்ல அனுமதி இல்லை.

★ சுந்தர் தெருவில் ஏற்கனவே இருந்த ஒருவழிப்பாதை மாற்றப்பட்டு வாகனங்கள் கோமதிநாயகம் சாலையில் இருந்து அண்ணாசாலை நோக்கி செல்ல அனுமதிக்கப்படும். அண்ணாசாலையில் இருந்து வாகனங்கள் கோமதி நாயகம் சாலை நோக்கி செல்ல அனுமதி இல்லை.

★ விஜயராகவா சாலையில் ஏற்கனவே உள்ள போக்குவரத்தில் எந்த மாற்றமும் இல்லை.

ஏற்கனவே வடக்கு போக் சாலையில் இருந்த ஒருவழிப் பாதை மாற்றப்பட்டு ம.பொ.சி சந்திப்பில் இருந்து வாகனங்கள் விஜயராகவா சாலை நோக்கி செல்ல அனுமதிக்கப்படும்.

தியாகராய சாலையில் ஏற்கனவே இருந்த இருவழிப்பாதையில் எந்த மாற்றமும் இல்லை.

### வாகன போக்குவரத்து மாற்றங்கள்

★ மாநகர பேருந்துகளை தவிர நந்தனத்தில் இருந்து வரும் மற்ற வாகனங்கள் அனைத்தும் அண்ணா மேம்பாலம் நோக்கி செல்ல உள்ளவர்கள் எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் திரும்பி தியாகராய சாலை ம.பொ.சி சந்திப்பு, வடக்கு போக் சாலை, கோமதி நாயகம் சாலை வழியாக அண்ணா மேம்பாலம் சென்று அண்ணாசாலையை அடையலாம்.

★ எல்டாம்ஸ் சாலையில் இருந்து அண்ணாசாலைக்கு செல்ல வேண்டிய வாகனங்கள் நேராக தியாகராய சாலையில் செல்லலாம், ம.பொ.சி சந்திப்பில் வலது புறம் திரும்பி வடக்கு போக் சாலை வழியாக அண்ணா மேம்பாலம் அடையலாம்.

★ கோமதி நாயகம் சாலையில் இருந்து வடக்கு போக் சாலைக்கு (விஜயராகவா சாலை முதல் கோமதி நாயகம் சாலை வரை உள்ள) இடங்களுக்கு செல்ல வேண்டிய வாகனங்கள் முன்பாக உள்ள வாணி மகால் சந்திப்பில் வலது புறம் திரும்பி டாக்டர் நாயர் ரோடு, விஜயராகவா சாலை வழியாக வந்து வடக்கு போக் சாலைக்கு திரும்பி செல்லும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ வாகனங்கள் கோமதி நாயகம் சாலையில் இருந்து வடக்கு போக் சாலைக்கு வலது புறம் திரும்ப தடை செய்யப்படுகிறது. இனிமேல் இந்த வாகனங்கள் முன்பாக உள்ள வாணிமகால் சந்திப்பில் வலது புறம் திரும்பி டாக்டர் நாயர் ரோடு, தியாகராய சாலை வழியாக வந்து ம.பொ.சி சந்திப்பு வழியாக வடக்கு போக் சாலைக்கு திரும்பி செல்ல கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு

★ எல்டாம்ஸ் ரோடு சந்திப்பில் இருந்து வரும் வாகனங்கள் அண்ணாசாலையில் மேற்கு புறம் அமைந்துள்ள நிறுவனங்களுக்கு செல்லும் வாகனங்கள் மாநகர பேருந்து லைனில் தொடர்ச்சியாக எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் இருந்து அண்ணா மேம்பாலம் நோக்கி செல்ல தடை செய்யப்படுகிறது.

அண்ணாசாலையில் மேற்கு பகுதியில் உள்ள நிறுவனங்களுக்கு செல்பவர்கள் மட்டும் பேருந்து செல்லும் லைனில் அதற்காக அமைக்கப்பட்டுள்ள யூ வளைவில் திரும்பி தங்கள் நிறுவனங்களுக்கு செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

★ இந்த காரணங்களுக்காக 2 இடங்களில் மத்திய லைனில் இடைவெளி விடப்பட்டுள்ளது. அதன் வழியாக செல்ல ஒரு முனை முதல் மறுமுனை வரை செல்ல அனுமதிக்கப்படும், இந்த வசதி நிறுவனங்களுக்கு செல்பவர்களுக்கு மட்டும் இதனை பயன்படுத்தி தொடர்ச்சியாக செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

வாகன ஓட்டுநர்கள் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.